[திரு. பொ. உத்திராபதி] [1986 நவம்பர் 14

வேண்டிய சலுகைகள் கிடைக்காமல் இருப்பதைக் கணக்கில் எடுத்து, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் ஆகும் நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இருப்பதால் இந்த மசோதாவை திரும்பப் பெற்றுக் கொண்டு தேர்தலை இந்தத் தேதியில் நடத்துவோம் என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டு மசோதாவை எதிர்க்கிறேன் என்று சொல்லி அமைகிறேன்.

(முற்பகல் 10–50)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

திரு. எ. தெய்வநாயகம்: அவைத் தலைவர் அவர்களே, இன்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்படுகிற தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்கும் சட்ட முன்வடிவை நான் சார்ந்துள்ள இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக எதிர்க்கிறேன். இன்றைய மதுரை மாநகராட்சி சுகாதாரக் கேடாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, ரோடு வசதிகள் சீர்குலைந்து நிற்கின்றன. அங்கே இந்தக் குறைகளை எடுத்துச்சொல்ல மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், அங்கே அதிகாரிகளை அணுகி அவ்வப்

1986 நவம்பர் 14] [திரு. எ. தெய்வநாயகம்]

போது கூறுவதற்கு மக்கள் சக்தி ஒன்று திரண்டு பல உண்ணா விரதப் போராட்டங்கள், பஸ் மறியல் இப்படி நடந்துகொண்டே இருக்கின்றன. மக்கள் பிரதிநிதிகள் அங்கே அங்கம் வகித்து குறைகளை நிவர்த்திக்க ஒரு வாய்ப்பினைத் தேர்தல் மூலமாக அளிக்க வேண்டுமென்று கேட்டு இந்தச் சட்ட முன்வடிவை நான் மறுக்கிறேன்.

திரு. போன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆரம்ப நிலையிலே எதிர்க்கிறேன். அதற்கான காரணம் ஏற்கனவே 3 ஆண்டுகளாக இதற்குத் தனி அதிகாரிகள் காலக்கெடு நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இந்த 3 ஆண்டு காலக் கெடு இறுதி வடிவம் பெறுமா என்பது ஐயப்பாட்டிற்கு உரிய ஒன்றாக இருக்கிறது. அதற்குக் காரணம், சென்னை 12 ஆண்டுகளை நெருங்கிக் கொண்டிருக்கிறது ; கோவை 6 ஆண்டுகளை நெருங்கிக் கொண்டிருக்கிறது ; இந்தக் காலக் கட்டத்தில் மதுரை 3-வது ஆண்டை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அமைச்சரிடமிருந்து எதிர்பார்ப்பது எல்லாம் இதுதான் இறுதியான கால ஒத்தி வைப்பு என்கின்ற கட்டத்திலே இருக்குமானால் குறைந்தபட்ச ஜனநாயகக் கடமையாவது இந்த அரசு ஆற்ற முன்வந்திருக்கிறது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் காலக் கெடுதான் இறுதியான காலக் கெடு என்று அறிவித்து தேர்தலை நடத்துவதற்கான முறையான ஜனநாயக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, ஆரம்ப நிலையில் இந்தச் சட்ட முன்வடிவை எதிர்த்து, அமர்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துவதை எதிர்த்து மாண்புமிகு உறுப்பினர்கள் இன்று ரோடு வசதி இல்லாதது குறித்து, சுகாதார வசதி இல்லாதது குறித்து எல்லாம் ஒரு சில விவரங்களை எடுத்துச் சொன்னார்கள். அந்த விவரங்களுக்கு இடையில் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற 'ஸ்டேட்மென்ட் ஆஃப் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ்ஸைப்' படித்துப் பார்த்தால், இப்பொழுது கேட்கக்கூடிய 29-1-1987-லேயிருந்து 6 மாதத்திற்குள் இந்தத் தேர்தலை நடத்த முடியாது என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால், இங்கே சொல்லப்பட்டிருக்கிறது, இந்தியாவிலேயே மற்ற பகுதிகளிலுள்ள முனிசிபல் கார்ப்பரேஷன்களிலே உருவாக்கப்பட்டிருக்கிற நிலைமைகளையும், சட்டங்களையும், அதிகாரங்களையும், ஆட்சி முறைகளையும் எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு அரசு ஒரு பொதுவான கருத்தை உருவாக்குவதற்காகப் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது ; நடவடிக்கை இல்லை,

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1986 நவம்பர் 14

It is only under the active consideration of the Government and there are no active steps. இன்னும் நடைமுறைப்படுத்தப்படுகிற நடவடிக்கைக்கு வரவில்லை ; இன்னும் ஆழ்ந்த பரிசீல னையில்தான் இருக்கின்றது என்று தெரிகிறது. பரிசீலனை முடிந்து, அது சம்பந்தமாக நடவடிக்கைகளை எடுத்து, சட்டங் களை உருவாக்கக்கூடிய நேரத்திலேகூட இப்படி அகில இந்தியாவிலேயே உருவாக்கப்படுகிற சட்டத்தை இந்த அரசு இயற்றுவதா, அல்லது மத்திய அரசு இயற்றுவதா என்ற பிரச்சினை எழும்புகிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு 'கன்பி யூசிங் ஸ்டேட்மென்ட்'டாக, 'ஸ்டேட்மென்ட் ஆஃப் ஆப்ஜக்டஸ்' இருக்கிறது.

அது மட்டுமல்ல, இப்படியான Contradictory ஆன 'ஸ்டேட்மென்ட் ஆஃப் ஆப்ஜக்ட்ஸை' வைத்துக் கொண்டு இந்த நீடிப்பு வழங்குகிற இந்த 6 மாதத்திற்குள் இந்தத் தேர் தலை நடத்தி விட முடியும் என்று சொல்வது எந்த அளவுக்குச் சரியாக இருக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகவே, அரசு 6 மாதத்திற்குள்ளாக இப்படிப்பட்ட நடவடிக் கையை எடுத்து முடிக்க முடியுமா என்ற திட்டவட்டமான உறுதி இந்த அமைச்சரிடமிருந்து இந்த அவைக்குத் தேவைப்படுகிறது. இல்லையென்றால், இந்த 6 மாத காலம் நீட்டித்ததற்குப் பிறகும் மீண்டும் இதே மாதிரி சட்டத்தைக் கொண்டு வந்து மீண்டும் கேட்கக் கூடிய ஒரு நிலைமை ஏற்படுவதற்கு அமைச்சர் அவர் களும் அரசும் இடம் கொடுக்கக் கூடாது. ஆகவே, அதற்கேற்ற முறையில் ஒரு சட்டத்தை விரைவில் நிறைவேற்றி இந்த தேர்தலை விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆக்டிவ் கன்சிடரேஷனிலிருந்து ஆக்டிவ் நடை முறை ஏற்பாடுகளுக்கு வர வேண்டுமென்று வலியுறுத்தி, இதை அறிமுகப்படுத்துவதை நான் ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.